ரூபாய்க்குமேல் செலவு ஆகும். ஆகவே, இந்த வேலையைப் பொதுப்பணித் துறைதான் மேற்கொள்ள வேண்டும்.

Bridge near Anchetty

* 295 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to construct a bridge to Doddahalla near Anchetty where people of Natrapalayam area cannot pass in that road in the rainy season; and

(*b*) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) அஞ்செட்டி நகரத்திற்கு அருகில் உள்ள தொட்டஹல்லா ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்சமயம் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துணைக் கேள்வி இல்லை. வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் * வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கை

பாண்டிச்சேரி பட்டதாரி ஆசிரியர்களின் சம்பள விகிதம் குறித்த, கல்வி அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொழுது விதி 82-ன் கீழ் மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத் தலைவரவர்களே, 82-வது விதியின் கீழ் ஒரு அறிவிப்பைச் செய்ய விரும்புகிறேன். நேற்று டாக்டர் ஹாண்டே அவர்கள் பாண்டிச்சேரியில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்போது நான் அந்த அரசோடு தொடர்புகொண்டு, தகவல் சேகரித்து, தெரிவிப்பதாகச் சொன்னேன். அதன்படி அந்த அரசுடன் தொடர்புகொண்டு தகவல் பெறப்பட்டது. அதை அவைக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாண்டிச்சேரி அரசாங்கம் இப்போது மத்திய அரசின் நேரடி கண்காணிப்பில் இருப்பதால் ஊதிய விகிதம் இங்குள்ளதைவிட மாறுபட்டிருக்கிறது. இப்போது அங்கே பி.டி. ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 250 ரூபாய்; அகவிலைப்படி 146 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தவிர இப்போது மூன்றாவது சம்பளக் கமிஷன் அறிவிப்பும் வர இருக்கிறது. இதையொட்டி. இடைக்கால நிவாரணமும் வழங்க இருப்பதாகத் தெரிகிறது. இந்தத் திருத்தத்தை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன்.

(3) நடைமுறைக் கேள்வி

பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளவிகிதம் பற்றி அவைக்கு தவறான விவரம் கொடுத்ததாக அறிவிப்புக் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானம் குறித்து.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I have given privilege motion against the Education Minister stating that the facts given by him under Rule 82 the other day are not correct. That is not the only thing; I have included another item also. He has stated that the B.T. teachers get Rs. 350, but actually they get only Rs. 275 per mensem. There are some other incorrect facts also. That also I have included in my privilege motion. I want to know why it has been dropped and why is the Hon. Minister allowed to have a preference? He could have made a reference to it also. They are receiving actually Rs. 275 and not Rs. 350 as stated by the Minister. It is in the 3rd paper in ' Alai Osai '.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தமிழகத்தில் இரண்டாவது சம்பள கமிஷன் சிபாரிசுப்படி பி.டி. ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் 275 ரூபாய். அதன் பின்னால் 25 ரூபாய் கூட்டி, அடிப்படைச் சம்பளம் 300 ரூபாயாக்கப்பட்டது. அவர்கள் 'காட்டகிரியில்' உள்ள சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்களுக்கும் அந்த அளவு ஊதியம் அளிக்கப்பட்டது. அதோடு முன்பு அகவிலைப்படி 40 ரூபாய், இப்போது ஒரு 10 ரூபாய்—ஆக 50 ரூபாய் அளிக்கப்படுகிறது. இப்போது மொத்தச் சம்பளம் 250 ரூபாய் என்று குறிப்பிட்டேன். (திமதி அனந்தநாயகி குறுக்கீடு) பின்னால் அளிக்கப்பட்ட 10 ரூபாய் அகவிலைப்படி கையிலே கொடுக்கப்படாவிட்டாலும், அவர்களுடைய பிராவிடன்ட் பண்டில் சேர்க்கப்படுகிறது. அதனால் அதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.